# ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர்

**மாணவர்களின் தனிப்பட்ட கற்கும் பாணிகள் மற்றும் ஆர்வங்களை சந்திக்க உதவும் முகமாக ஸ்டுடன்ட் சக்சஸ் இனிஷியேடிவ் மூலமாக, ஒன்டாரியோ உயர்நிலைப் பள்ளிகள் விரிவக்கப்பட்ட திட்டங்களை வழங்குகின்றன. இந்தத் திட்டங்கள், பல்வேறுபட்ட புதிய மற்றும் மேம்பட்ட கல்வித் தெரிவுகள் மூலம் மாணவர்கள் தங்கள் உயர்நிலைப் பள்ளி அனுபவத்தை தமக்கேற்றவாறு வடிவமைக்க அனுமதிக்கிறது. இந்தத் தெரிவுகள் இரட்டைத் கிரெடிட்டுகள், ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர் மற்றும் கூட்டுறவுக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கும்.**

**இத் திட்டங்கள் அனைத்து மாணவர்களின் தேவைகள், ஆர்வங்கள் மற்றும் திறமைகளை சந்திக்க உதவுவதோடு கல்வியில் மாணவர்களை ஈடுபடுத்தி பட்டம்பெறவும் அதற்கும் பின்னான காலத்திற்கும் அவர்களை தயார்செய்கிறது.**

## ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர் (SHSM) என்றால் என்ன?

மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவுசெய்வதற்கான தேவைகளை சந்திப்பதோடு, ஒரு குறிப்பிட்ட பொருளாதார துறையில் கவனம் செலுத்த மாணவர்களுக்கு உதவும் அமைச்சுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமே SHSM ஆகும். இது படிப்பை நிறைவு செய்தபின் தொழில் பழகுவதற்கு, கல்லூரிக்கு, பல்கலைக்கழகத்திற்கு அல்லது வேலைத்தலத்திற்கு மாறிச்செல்லவும் உதவுகிறது.

2012–13 ம் பள்ளி ஆண்டிலிருந்து கீழ்க்காணும் துறைகளுக்கு SHSM கிடைக்கப்பெறும்:

- விவசாயம்
- கலையும் கலாச்சாரமும்
- வான்பயணம்/விண்வெளி
- வணிகம்
- கட்டுமானம்
- சக்தித்துறை
- சுற்றுச்சூழல்
- உணவு தயாரிப்பு
- வனவியல்
- உடல்நலம் மற்றும் நலவாழ்வு
- தோட்டக்கலை மற்றும் நில அழகு வேலை
- விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா
- தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழிநுட்பம்
- நீதித் துறை, சமுதாயப் பாதுகாப்பு, மற்றும் அவசர சேவைகள்
- உற்பத்தி
- சுரங்கவியல்
- இலாப-நோக்கமற்ற வேலை
- விளையாட்டு
- போக்குவரத்து

## ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர்- இன் முக்கிய பலன்கள்

SHSM ஆனது மாணவர்களுக்கு உதவும் வழிகள்:

- அவர்களின் ஆர்வம் மற்றும் திறமைகளுக்குத் தகுந்த முறையில் மேல்நிலைப் பள்ளி கல்வியை அமைத்தல்.
- விசேஷித்த அறிவு மற்றும் திறமைகளை வளர்த்தல்.
- மேற்படிப்பு கல்வி நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் அங்கீகரிக்கும் கிரெடிற்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- பிரிவுகளால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் வேலைக்குரிய பயிற்சி.
- ஒன்டாரியோ ஸ்கில்ஸ் பாஸ்போர்ட்டினால் ஆவணப்படுத்தப்பட்ட முக்கிய திறமைகள் மற்றும் வேலைப் பழக்கங்களை வளர்த்தல்.
- வேலைக் குறிக்கோள்களை அடையாளம் கண்டு, ஆராய்ந்து, புடமிடுதல் மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய அறிவுடைய தீர்மானங்களை எடுத்தல்.
- அவர்களின் குறிக்கோள்களும் திட்டங்களும் மாற்றமடையுமானால், வழிகளை மாற்றுவதற்கான தெரிவுகளுக்கு வளைந்துகொடுக்கும் வகையில் இருத்தல்.

## ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர் எவ்வாறு அங்கீகரிக்கப்படுகிறது?

SHSM ஐ வெற்றிகரமாக நிறைவுசெய்யும் மாணவர்கள் பெறுபவை:

- சிவப்பு சீல் பதிக்கப்பட்ட ஒன்டாரியோ மேல்நிலைப் பள்ளி டிப்ளோமா
- ஒருவரின் சாதனைகளை ஆவணமாக்கும் SHSM பதிவு
- ஒருவரின் ஒன்டாரியோ ஸ்டுடன்ட் ட்ரான்ஸ்கிறிப்ட்-இன் முறையான அங்கீகாரம்.

## ஸ்பெஷலிஸ்ட் ஹை ஸ்கில்ஸ் மேஜர் எங்கே வழங்கப்படுகின்றது? நான் எவ்வாறு மேலும் தெரிந்துகொள்ளலாம்?

2012–13 இல், மாநிலம் முழுவதிலும் எல்லா பாடசாலை சபைகளிலும் SHSM திட்டங்கள் கிடைக்கப்பெறும். கிடைக்கப்பெறுபவை பற்றிய மேலதிக தகவலுக்கு உங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் அல்லது பாடசாலை சபையின் ஸ்டுடன்ட் சக்சஸ் லீடரை அணுகுங்கள். SHSM கள் பற்றிய மேலதிக விவரமான தகவலும் அவை எவ்வாறு செயல்ப்படுகின்றன என்பதும் **www.ontario.ca/studentsuccess** இல் காணப்படும்.

ontario.ca/EDUparents

ISBN 978-1-4606-1201-9 (PDF) (Tamil) © ஒன்டாரியோவுக்கான குவீன்ஸ் ப்ரின்டர், 2013

Ontario